இதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வெளியே குற்றச் செயலைப் புரிந்ததற்காகக் கைது செய்யப்படுவதும் முதல் முறையல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் நன்னிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி பத்மா அவர்கள் 9-3-1998 அன்றும், திரு. தாமரைக்கனி அவர்கள் 22-6-1998 அன்றும், திரு. கும்மிடிப்பூண்டி வேணு அவர்கள் 24-8-1998 அன்றும், தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் 16-4-1999 அன்றும், திருப்பத்தூர் கோ. சண்முகம் அவர்கள் 15-4-1999 அன்றும் சட்டமன்றத்திற்கு வெளியே குற்றச் செயல்களில் ஈடுபட்டதற்காக இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். எனவே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து அவையின் கவனத்தை ஈர்க்கத் தேவையில்லை. இதுகுறித்து அவை உரிமை மீறல் ஏதும் எழவில்லை எனத் தீர்ப்பு அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள், (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்...

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறைக்கு வாருங்கள். எப்போது எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றிப் பேசுவோம், ஞானசேகரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) ஆய்வில் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 24]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. என்னுடைய ஆய்வில் இருக்கிறது, பிறகு எடுத்துக்கொள்ளலாம். திரு. ஞானசேகரன்.

முற்பகல் 11-20

திரு. ஜே. ஹேமச்சந்திரன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) எடுத்துக் கொள்ளப்பட்டதற்குப் பிறகுதான் அதைப்பற்றிப் பேச வேண்டும். (குறுக்கீடு) அறைக்கு வாருங்கள், அதைப்பற்றிப் பேசலாம். திரு. சி. ஞானசேகரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இப்போது எங்களுக்கு அதன் மேலே சொல்வதற்கான உரிமை உண்டு. அந்த உரிமையின் அடிப்படையில் எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அந்த முறையில் அந்த...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இப்போது அதை எடுக்கவில்லை. (குறுக்கீடு) இப்போது அதை எடுக்கவில்லை. எப்போது எடுக்கிறேன் என்று சொல்கிறேன், என்னுடைய அறைக்கு வாருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இந்த விஷயத்தைப் பொறுத்த அளவிலே காலம் கடத்தவேண்டிய ஒரு பிரச்சினை அல்ல. ஏற்கெனவே நாங்கள் முதலமைச்சர் அவர்களுக்கும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு; நாளைக்கு வாருங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், நாளைக்கு வாருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஏப்ரல் 24

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இதை எடுத்துக்கொள்ளவில்லை என்பதனாலே எங்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது என்கிற முறையிலே நாங்கள் அதை ஆட்சேபித்து, வெளிநடப்புச் செய்கிறோம்.

[இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டம், காட்பாடி, கழிஞ்சூர் பகுதியில்...

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் தனது பையை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். ஆகவே, நிச்சயம் திரும்பி வருவார் என்று நம்பலாம். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொன்ன வேலையைச் செய்யுங்கள் ஞானசேகரன். *(சிரிப்பு)* பெரிய கொடுமையாக இருக்கிறது உங்களோடு. *(சிரிப்பு)*

4. கவன ஈர்ப்பு

வேலூரில் ரிலையன்ஸ், பாரத் டெலிநெட், பி.எஸ்.என்.எல். ஆகிய நிறுவனங்களால் வெட்டப்பட்ட சாலைகளை மீண்டும் செப்பனிடல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சி. ஞானசேகரன்.